பாஸ்கா - **4**ஆம் வாரம்

ஞாயிறு

முதல் ஆண்டு

**முன்னுரை**

பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு இன்று.

பங்கெடுக்க வந்துள்ள உங்கள் யாவரையும் ‘நல்ஆயன்’ நம் இயேசுவின் நாமத்தில் வரவேற்கின்றோம்.

ஒவ்வொரு ஆண்டும் நான்காம் பாஸ்கா காலத்தின் ஞாயிறை ‘நல்லாயன் ஞாயிறு’ என்று அழைப்பது உண்டு. இந்த நாளிலே தேவ அழைத்தல் தினமாகவும் கொண்டாடப்படுவதுண்டு.

நானே நல் ஆயன், நானே வாயில் என்று இயேசு கூறுவதை அறிகின்றோம்.

ஆயன் என்பவர் தியாகத்தையும், துணிவையும், ஆள்பார்த்து செயல்படாத தன்மையை கொண்டு இருப்பவர்.

நானே வாயில் என்று கூறுவதன் வழியாக, எல்லாம் தன் வழியாக மீட்படையும் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றார்.

அவர்வழியாக, அவரோடு, அவரில் எல்லா ஆன்மாக்களும் மீட்படைய திருமுழுக்கு பெற்ற எல்லாரும் நல் ஆயனின் பண்புகளோடு பயணிக்க அழைக்கப்பட்டு இருக்கின்றோம் என்பதனை உணர்ந்து பலியிலே பங்கேற்று செபிப்போம்.

முதல் வாசகம்

கடவுள் அவரை ஆண்டவரும் மெசியாவுமாக்கினார்.

திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம் 2: 14ய, 36-41

பெந்தக்கோஸ்து என்னும் நாள் வந்தபோது பேதுரு பதினொருவருடன் சேர்ந்து, எழுந்து நின்று, உரத்த குரலில் அவர்களிடம் பின்வருமாறு கூறினார்: \"நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவைக் கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக்கினார் என்பதை இஸ்ரயேல் மக்களாகிய நீங்கள் அனைவரும் உறுதியாக அறிந்துகொள்ளுங்கள்.\"

அவர்கள் இதைக் கேட்டு உள்ளம் குத்தப்பட்டவர்களாய் பேதுருவையும் மற்றத் திருத்தூதர்களையும் பார்த்து, ``சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?\'\' என்று கேட்டார்கள்.

அதற்குப் பேதுரு, அவர்களிடம், ``நீங்கள் மனம் மாறுங்கள். உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள். அப்பொழுது தூய ஆவியைக் கொடையாகப் பெறுவீர்கள். ஏனென்றால் இந்த வாக்குறுதியானது உங்களுக்கும் உங்களது பிள்ளைகளுக்கும் தொலையிலுள்ள யாவருக்கும் ஆண்டவராகிய கடவுள் தம்மிடம் அழைக்கும் அனைவருக்கும் உரியது\'\' என்றார்.

மேலும் அவர் வேறுபல சான்றுகளை எடுத்துக்கூறி, ``நெறிகெட்ட இந்தத் தலைமுறையிலிருந்து, உங்களைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்\'\' என்று அறிவுறுத்தினார்.

அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்கள் திருமுழுக்குப் பெற்றார்கள். அன்று ஏறக்குறைய மூவாயிரம் பேர் அவர்களோடு சேர்க்கப்பட்டனர்.

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

திபா 23: 1-3ய. 3b-4. 5. 6. (பல்லவி: 1)

பல்லவி: ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை. அல்லது: அல்லேலூயா.

1 ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை. 2 பசும்புல் வெளிமீது எனை அவர் இளைப்பாறச் செய்வார்; அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார். 3ய அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார். பல்லவி

3b தம் பெயர்க்கேற்ப எனை நீதிவழி நடத்திடுவார். 4 மேலும், சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்; உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும். பல்லவி

5 என்னுடைய எதிரிகளின் கண் முன்னே எனக்கொரு விருந்தினை ஏற்பாடு செய்கின்றீர்; என் தலையில் நறுமணத் தைலம் பூசுகின்றீர்; எனது பாத்திரம் நிரம்பி வழிகின்றது. பல்லவி

6 உண்மையாகவே, என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் என்னைப் புடைசூழ்ந்து வரும்; நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன். பல்லவி

இரண்டாம் வாசகம்

உங்கள் ஆன்மாக்களின் ஆயரிடம் திரும்பி வந்திருக்கிறீர்கள்.

திருத்தூதர் பேதுரு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2: 20b-25

அன்பிற்குரியவர்களே, நன்மை செய்தும், அதற்காகப் பொறுமையோடு துன்புற்றால், அது கடவுளுக்கு உகந்ததாகும். கிறிஸ்துவும் உங்களுக்காகத் துன்புற்று ஒரு முன் மாதிரியை வைத்துச் சென்றுள்ளார்.

எனவே நீங்கள் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள்; இதற்காகவே அழைக்கப்பட்டுள்ளீர்கள். ``வன்செயல் எதுவும் அவர் செய்ததில்லை; வஞ்சனை எதுவும் அவர் வாயில் இருந்ததில்லை.\'\' பழிக்கப்பட்டபோது பதிலுக்குப் பழிக்கவில்லை; துன்புறுத்தப்பட்டபோது அச்சுறுத்தவில்லை; நியாயமாகத் தீர்ப்பு வழங்குவோரிடம் தம்மை ஒப்படைத்தார். சிலுவையின்மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். நாம் பாவங்களுக்கு இறந்து, நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார். அவர்தம் காயங்களால் நீங்கள் குணமடைந்துள்ளீர்கள். நீங்கள் வழி தவறி அலையும் ஆடுகளைப்போல இருந்தீர்கள். ஆனால் இப்பொழுது உங்கள் ஆன்மாக்களின் ஆயரும் கண்காணிப்பாளருமாய் இருப்பவரிடம் திரும்பி வந்திருக்கிறீர்கள்.

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி

யோவா 10: 14-15

அல்லேலூயா, அல்லேலூயா! நல்ல ஆயன் நானே. நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

நற்செய்தி வாசகம்

ஆடுகளுக்கு வாயில் நானே.

+யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 10: 1-10

அக்காலத்தில் இயேசு கூறியது: ``உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: ஆட்டுக் கொட்டிலில் வாயில் வழியாக நுழையாமல் வேறு வழியாக ஏறிக் குதிப்போர் திருடர் அல்லது கொள்ளையராய் இருப்பர். வாயில் வழியாக நுழைபவர் ஆடுகளின் ஆயர். அவருக்கே காவலர் வாயிலைத் திறந்துவிடுவார். ஆடுகளும் அவரது குரலுக்கே செவிசாய்க்கும். அவர் தம்முடைய சொந்த ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு வெளியே கூட்டிச் செல்வார். தம்முடைய சொந்த ஆடுகள் அனைத்தையும் வெளியே ஓட்டி வந்தபின் அவர் அவற்றிற்குமுன் செல்வார். ஆடுகளும் அவரைப் பின்தொடரும். ஏனெனில் அவரது குரல் அவற்றுக்குத் தெரியும். அறியாத ஒருவரை அவை பின்தொடரா. அவரை விட்டு அவை ஓடிப்போகும். ஏனெனில் அவரது குரல் அவற்றுக்குத் தெரியாது.\'\' இயேசு அவர்களிடம் உவமையாக இவ்வாறு சொன்னார்.

ஆனால் அவர் சொன்னதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. மீண்டும் இயேசு கூறியது: ``உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: ஆடுகளுக்கு வாயில் நானே. எனக்கு முன்பு வந்தவர் அனைவரும் திருடரும் கொள்ளையருமே. அவர்களுக்கு ஆடுகள் செவிசாய்க்கவில்லை. நானே வாயில். என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர்; வெளியே வருவர்; மேய்ச்சல் நிலத்தைக் கண்டுகொள்வர். திருடுவதற்கும் கொல்வதற்கும் அழிப்பதற்குமன்றித் திருடர் வேறெதற்கும் வருவதில்லை. ஆனால் நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன்.\'\'

இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.

**உயிர்ப்பு ஞாயிறு - 4**

ஆண்டவரே நம் ஆயர். 'ஆடுகள் வாழ்வு பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்' என்று கிறிஸ்து அறிவிக்கின்றார். ஆயர் தன் ஆடுகளைக் குரல் கொடுத்து ஒன்று சேர்க்கிறார். பின்பு மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்கிறார். நீர் அருந்துவதற்கு நீரோடை நோக்கிப் பாதை காட்டுகிறார். குட்டி ஆடுகளை தம் தோளில் சுமக்கிறார். ஆடுகளைச் சிதறவிடாமல் ஒருங்கிணைக்க கோலைப் பயன்படுத்துகிறார். தம் ஆடுகளைப் பாதுகாக்க தம் உயிரையும் கொடுக்கத் துணிகிறார்.

ஆயர் ஆடுகளை நேசிப்பதுபோலவே ஆடுகளும் ஆயரின் குரலைக்கேட்டு, அவரின் வழிநடத்துதலுக்கு உட்பட்டு ஆயரை நேசிக்கின்றன. பாஸ்கா விழாவிலே ஆட்டுக்குட்டி வெட்டப்பட்டு பலி ஒப்புக்கொடுப்பது போன்று புதிய பாஸ்காவில் இயேசு தன்னையே பலியாக்கி நமக்காக எக்காலத்திற்கும் ஒரே பலியாக தன்னை ஒப்புக்கொடுத்தார்.

வழக்கமாக ஆடுகள்தான் பலியிடப்படும். ஆனால் இங்கு ஆடுகளின் ஆயர் தன் ஆடுகள் வாழ்வு பெறும் பொருட்டு தன்னைப் பலியாக்குகின்றார். எனவே… இயேசுவின் திருப்பலி அனைவருக்கும் என்றென்றும் வாழ்வு தரும் தியாகப் பலியாகும்.

**மன்றாட்டு**

திருஅவையை சீர்திருத்த முற்படும் தலைமை ஆயனாம் எம் திருத்தந்தை பிரான்சிஸ்க்கு உம் ஆவியின் அருள் தந்து வழிநடத்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

புதிய நாடாளுமன்றத் தலைவர்களை ஆவியின் அருளால் அர்ச்சித்து, நேரிய உள்ளத்துடனும், உண்மைத்தன்மையோடு, பொறுப்புடனே பயணிக்க அருள் தந்து வழிநடத்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

தேர்விலே தேர்ச்சி பெற்றோருக்கும், மற்றவர்களுக்கும் உம்ஆவியினை கொடையாக தந்து உம்சித்தம் அறிந்து, எந்த பாதையிலே பயணிக்க வேண்டும் என்பதனை அறிந்து கொள்ள, அருள் தந்து வழிநடத்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

திருஅவைக்கு தொடர்ந்து நல்ல விழுமியங்களை கை கொண்டு ஒழுகும் நல்ல உள்ளங்களை, தொடர்ந்து தந்து வழிநடத்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

கொண்டாடப்பட்டு வரும் விடுமுறை வேதாகப்பள்ளியில் பயிலும் சிறார்களை அரவணைத்து, ஆசீவதித்து, அருள் தந்து வழிநடத்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

மிகப்பெரிய சனநாயக நாடான பாரதத்தில், நடந்து முடிந்த தேர்தலின் முடிவுகளில், எந்த வன்முறையும் இல்லாத நிலையில் அமைந்திட, அருள் தந்து வழிநடத்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.